# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண். 5/2011

பி.வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 11–08–2025.
பெயர் = முத்துப்பாண்டி பி.வா.சா.–2

பி.வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

(1) எனக்குச்சொந்தஊர் ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வேப்பங்குளம் கிராமம் ஆகும். தாவாச்சொத்துக்கள் எந்த ஊரில் உள்ளது என்றால் க.விலக்கில் உள்ளது. தும்முசின்னம்பட்டியில் உள்ளதாக சொல்வார்கள் என சாட்சி கூறுகிறார். மீண்டும் சாட்சி தும்முசின்னம்பட்டி பஞ்சாயத்திற்கு உட்பட்டது என கூறுகிறார். தாவாச்சொத்தில் மடம் உள்ளது என்றால் இல்லை. நான் இரண்டு இலக்க சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளேன். அந்த சொத்துக்களின் நான்குமால் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1வது லக்கச்சொத்தின் கிழக்கே யார் இடம் உள்ளது என்று தெரியாது. 2ம் லக்கச்சொத்தின் கிழக்கே யார் இடம் உள்ளது என்று தெரியாது. 2ம் லக்கச்சொத்தின் தெற்கே யார் இடம் உள்ளது என்றால் புறம்போக்கு இடத்தில் தண்ணீர் தொட்டி கட்டியுள்ளார்கள். சொத்து வாங்குவதற்கு முன்பாக வில்லங்கசான்று எடுத்து பார்த்தேனா என்றால் 40 வருடத்திற்கு எடுத்துப்பார்த்தேன். அந்த வில்லங்கச்சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வக்கீலிடம் கொடுத்தேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் டேவிட் என்பவரிடம் வாங்கினேன். டேவிட் யாரிடம் கிரையம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் பூர்வீக இடம் என்று தான் கிரையம் கொடுத்துள்ளார். பூர்வீக இடம் என்றால் பாகம் செய்துகொண்டார்களா என்றால் அவர் ஒரே பையன் என்று அவர் என்னிடம் சொன்னார். நான் கிரையம் வாங்கிய நபருக்கு எந்தவகையில் பூர்வீகம் என்று நான் கேட்டேனா என்றால் வில்லங்கம் பார்த்ததில் 40 வருடங்களாக அவர் பெயர் மட்டும் தான் இருந்தது.

(2) தாவா வழக்கை நடத்துவதற்கு வக்கீலுக்கு விவரம் யார் சொன்னார் என்றால் நானும் என் மகனும் சொன்னோம். தாவா சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் படிக்கவில்லை. 1வது

லக்கச்சொத்து 22 செண்ட் விஸ்தீரணம். 2 வது லக்கச்சொத்து 1 ஏக்கர் 12 செண்ட் விஸ்தீரணம். என் மீது யார் வழக்கு போட்டது என்றால் தும்முசின்னம்பட்டிக்காரர் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். பெயர் தெரியுமா என்றால் தெரியும் கருப்பசாமி. அவரை பூசாரி கருப்பசாமி என்று அழைப்பார்களா என்றால் கருப்பசாமி என்று தான் கூப்பிடுவார்கள். அவரை ஊரில் பூசாரி கருப்பசாமி என்று கூப்பிடுவார்களா இல்லையா என்று எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். தாவா வழக்கின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவா வழக்குச்சொத்து ராமலிங்க சன்னியாசி கிரயம் பெற்ற இடம் என்பது எனக்குத் தெரியுமா என்றால் என் கிரையதாரருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று சாட்சி கூறுகிறார். ராமலிங்க சன்னியாசி கிரையம் பெற்ற இடம் என கருப்பசாமி வழக்கு போட்டுள்ளார் என்றால் அவருக்கும் அந்த இடத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தை ராமலிங்க சன்னியாசி என்பவர் 11.10.1940 ம் தேதிய கிரயப்பத்திரம் மூலம் குருவம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி குமரையா என்பவரை தெரியுமா என்றால் தெரியும். 2 ம் பிரதிவாதியும் தாவாச்சொத்து தனக்குபாத்தியம் என வழக்காடுகிறார் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி என்ன சொல்லி வழக்காடுகிறார் என எனக்குத் தெரியுமா என்றால் 2 ம் பிரதிவாதியின் அப்பா ராமலிங்கசன்னியாசிக்கு சாப்பாடு போட்டு இறுதிச்சடங்கை செய்ததால் அவருக்கு பாத்தியம் என வழக்காடுகிறார் என சாட்சி கூறுகிறார்.

(3) 2 ம் பிரதிவாதி எதிர்வாதம் செய்ததற்கு பின்னர் அதனைப்பற்றி நான் தெரிந்துகொண்டேனா என்றால் அதன்பிறகு என் வழக்கறிஞர் மூலமாக தாவா சொத்து 2 ம் பிரதிவாதிக்கும் பாத்தியம் கிடையாது எங்களுக்கு மட்டும் தான் பாத்தியம் என வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சி கூறுகிறார். 40 வருடங்களாக தாவா சொத்திற்கான பட்டாவை சரிபார்த்தேனா என்றால் ஆமாம் டேவிட் பெயரில் தான் உள்ளது. டேவிட் என்பவர் பெயரில் எந்த வருடத்திலிருந்து பட்டா உள்ளது என்றால் எனக்குத் தெரியாது என் மகனுக்குதான் தெரியும். என் மகனை சாட்சியாக விசாரிப்பேனா என்றால் ஆமாம். டேவிட் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் பிறந்தது வளர்ந்தது எல்லாம் க.விலக்கில் தான். அதன்பிறகு மதுரைக்கு சென்று இறந்துவிட்டார் என சாட்சி கூறுகிறார். மதுரைக்கு எப்போது போனார் என எனக்குத் தெரியாது. டேவிட் என்பவருக்கு தாவாச்சொத்தை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. டேவிட் என்பவர் தாவாச்சொத்து தனக்குப்பாத்தியம் என நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அந்த

வழக்கில் அவருக்கு பாதகமாக வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது அந்த வழக்கு கிடையாது என சாட்சி கூறுகிறார். அ.வ.எண்.283/2003 வழக்கில் டேவிட் என்பவர் அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை டிரஸ்ட் அதன் மேனேஜிங் டிரஸ்டி திரு.Y.டேவிட் மூலம் என வாதியாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது என் மகன் சொல்லி கேள்விபட்டேன் என சாட்சி கூறுகிறார்.

(4) அந்த வழக்கை பற்றி நான் விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி டேவிட் என்பவர் மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை டிரஸ்ட் அதன் மேனேஜிங் டிரஸ்டி என்ற அடிப்படையில் தாவாச்சொத்துக்களை பொறுத்து அறக்கட்டளைக்கு பாத்தியம் என விளம்புகை கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவாச்சொத்துக்களுக்கும் அறக்கட்டளைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், எந்த ஒரு பாத்தியமும் இல்லாத டேவிட் என்பவரிடமிருந்து தாவா சொத்து சம்பந்தமாக மோசடியாக நான் ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவாச்சொத்துக்கள் என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்களில் ராமலிங்க சன்னியாசி மடம் உள்ளது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் டேவிட் என்பவருக்கு எந்தஒரு பாத்தியமும் இல்லை என்பதால் அவரிடமிருந்து கிரையம் பெற்றதாக எனக்கு எந்தவித அனுபவமும், பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை நான் எப்போது வாங்கினேன் என்றால் 13 வருடம் இருக்கும் என்று சாட்சி கூறுகிறார். 2011ம் வருடம் வாங்கியதாக சாட்சி மீண்டும் கூறுகிறார். தற்போதுவரை தாவாச்சொத்துக்களுக்கு பட்டா மாற்றம் செய்ய நான் மனு செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா என் பெயருக்கும், என் மகன் பெயருக்கும் மாறி ஊர்க்காரர்கள் சண்டை போட்டதால் மீண்டும் டேவிட் பெயருக்கு மாறி விட்டது. கிராம நிர்வாக அலுவலரிடம் கேட்டதற்கு டேவிட் பெயரில் தானே உள்ளது அவ்வாறே இருக்கட்டும் என சொல்லிவிட்டார் என சாட்சி மீண்டும் கூறுகிறார். பட்டா மாற்ற மனு எப்போது செய்தேன் என்றால் கிரையம் பெற்ற இரண்டு நாட்களில் மனு செய்தேன் 10 நாட்களில் பட்டா மாறிவிட்டது. என் பெயரில் மாறிய பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை வீட்டில் உள்ளது. தேவையென்றால் தாக்கல் செய்கிறேன். தாவா வழக்கு நிலுவையில்

இருக்கும்போது தான் நான் கிரயம் பெற்றேன் என்றால் வழக்கு இருக்கும் விசயம் கிரயம் வாங்கும்போது தெரியாது என சாட்சி கூறுகிறார்.

(5) நானும், 2ம் பிரதிவாதி குமரையாவும் சேர்ந்துகொண்டு ராமலிங்க சன்னியாசி மடத்திற்கு சொந்தமான சொத்தை அபகரிக்க வேண்டி டேவிட் என்பவரிடம் சென்று தாவாச்சொத்துக்களை கிரையம் வாங்கினோம் என்றால் சரியல்ல. கிரயப்பத்திரத்தை எழுதிக்கொடுக்க டேவிட்டிற்கு எந்த அருகதையும் கிடையாது. தாவாச்சொத்துக்கள் அவருடையது அல்ல என்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்கள் ராமலிங்க சன்னியாசி என்பவர் பொதுமக்களுக்கு அன்னதானம், தண்ணீர் பந்தல் போன்ற தர்மகாரியங்கள் செய்வதற்காக தான் யாசகமாக பெற்ற பணத்தைக்கொண்டு கிரயம் பெற்று தன் ஆயுள் வரையும், அதற்கு பின்னிட்டும் தொடர்ந்து நடப்பதற்காக அந்த மடம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. ராமலிங்க சன்னியாசியின் விருப்பத்தின்படி தாவாச்சொத்தில் அவருடைய பூதஉடலை அடக்கம் செய்து அதில் சமாதியும் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 22 செண்டு இடத்தில் ராமலிங்க சன்னியாசியின் சமாதி உள்ளது, வருடாவருடம் அதில் குருபூஜை நடத்தி வரப்படுகிறது என்றால் சரியல்ல. ஒவ்வொரு வருடமும் குருபூஜை செய்யவும், தினசரி பூஜை செய்யவும் கருப்பசாமி என்பவரை ஊரிலிருந்து நியமித்து அவர்தான் தாவாச்சொத்தின் நிர்வாகங்களையும் பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து ராமலிங்கசன்னியாசி மடத்திற்கு தான் பாத்தியம், அந்த இடத்தினை வில்லங்கம் செய்யவோ கிரயம் கொடுக்கவோ யாருக்கும் அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது லக்கச்சொத்து கமுதி ரோட்டின் வடக்கே உள்ளது. அதில் கடைகள் உள்ளதா என்றால் இல்லை. குமாரவேல் என்பவர் கடை வைத்துள்ளாரா என்றால் வைத்திருந்தார் நாங்கள் சண்டை போட்டதற்கு நான் ரோட்டில் தான் கடைவைத்துள்ளேன் உங்கள் இடத்தில் வைக்கவில்லை என சொல்லிவிட்டார். தாவாச்சொத்துக்கள் ராமலிங்க சன்னியாசி மடத்திற்கு பாத்தியம் என வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவ்வாறு தாக்கல் செய்ய அவருக்கு எந்த உரிமையும் இல்லை என சாட்சி கூறுகிறார். 2ம் பிரதிவாதியும் நானும் கூட்டு சேர்ந்துகொண்டு தாவாச்சொத்தை வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் டேவிட் என்பவருக்கு தாவாசொத்துக்களில் பாத்தியம் இல்லை என தீர்ப்பான பிறகு மோசடியாக அவரிடமிருந்து நான் கிரையம் பெற்றுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாச்சொத்து ராமலிங்க சன்னியாசி மடத்திற்கு தான் பாத்தியம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :– இல்லை.

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.08.11 17:02:20 +0530